
# கலை ஊற்று



இதழ் - 2

வெளியீடு
உயர்தர மாணவர் மன்றம்
யா/தொண்டைமானாறு வீ.ம.வித்தியாலயம்

# கலை ஊற்று

இதழ் - 2


வெளியீடு

**உயர்தர மாணவர் மன்றம்**

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை

மகா வித்தியாலயம்

2016

# பாடசாலைக் கீதம்

இராகம்:- ஹம்சத்வனி    தாளம் :- ஆதி

**விருத்தம்**

வாழ்க நீ மாதா வளர்க நீ மாதா
ஆழ்கடல் மருவம் தொண்டைமானாற்று
மகாவித்தியாலயம் மாண்புடன் வாழ்க
வாழிய வாழியவே.

**பல்லவி**

வாழ்க நீ மாதா வளர்க நீ மாதா
ஆழ்கடல் மருவும் தொண்டைமானாற்று
மகாவித்தியாலயம் மாண்புடன் வாழ்க

(வாழ்க)

**சரணங்கள்**

கலை விஞ்ஞானம் கைத்தொழில் வர்த்தகம்
கடற்றொழில் கமத்தொழில் ஆகியவெல்லாம்
மலையென வளர்ந்து மாநிலம் செழிக்க
ஞான ஒளியே நாடெங்கும் பரவிட

(வாழ்க)

அல்லும் பகலும் உனை நினைந்திடுவோம்
அன்னையே உந்தன் அடி பணிந்திடுவோம்
எல்லையில் கல்வி எங்கட்கு மூட்டி
எம் வாழ்வு வளம் பெறச் செய்தருள்வாயே!

(வாழ்க)

நாடுநலம் பெற நல்லோர் மலிந்திட
காடு கரம்பைகள் கழனிக ளாகிட
பாடும் பாவலர் பண்டிதர் மல்கிட
ஈடும் எடுப்பும் என்றென்றும் வாழிய!

(வாழ்க)

சான்றோர் எனத்தகும் புதல்வரைப் பெற்று
சகல துறையிலும் துலங்கிடச் செய்து
ஈன்ற மைந்தரின் அன்பினைப் பெற்று
இன்பமாய் என்றென்றும் வாழிய! வாழிய!

(வாழ்க)

வாழிய வாழிய வாழியவே!
வாழிய வாழிய வாழியவே!
வாழிய வாழிய வாழியவே!

# நூல் விபரம்

*கலை ஊற்று – 2*


முதற்பதிப்பு : 2016.07.16

இணை இதழாசிரியர் : செல்வி ச. சுரேந்தினி,
செல்வி இ. சந்துஜா

பொறுப்பாசிரியர் : திரு சு. குணேஸ்வரன்

அட்டை ஓவியம் : பா. பாஸ்கரன் (கலைப்பிரிவு 2018)

இதழ் வடிவமைப்பு : சு. சிவனேஸ்வரன்

அச்சுப்பதிப்பு : ஆகாயம் பதிப்பகம்,
இமையாணன், உடுப்பிட்டி.

வெளியீடு : உயர்தர மாணவர் மன்றம்,
யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை
மகாவித்தியாலயம்.

மின்னஞ்சல் : thondaimanaruvid @gmail.com

வலைப்பதிவு : thondaimanaruvmv.blogspot.com

வித்தியாலய அதிபர் அவர்களின்

வாழ்த்துச் செய்தி



## கலை ஊற்று
## என்றென்றும் வாழியவே!

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய "உயர்தர மாணவர் மன்றம்" முன்னெடுக்கும் செயற்பாடுகளில் ஒன்றாக "கலை ஊற்று" சஞ்சிகை ஆக்கம் இடம்பெறுகிறது. முழுமையாக உயர்தர மாணவர்களின் ஆக்கங்களின் தொகுப்பாகவே இது அமைகின்றது.

ஒரு மனிதன் செயலாற்றுவதற்குரிய நோய் நொடிகளற்ற உடம்போடு பிறந்து வளர்ந்த பின்பும் செயலாற்றுவதற்குத் தேவையான அறிவும், திறமையும், உடற்பலமும் பெற வேண்டும். இவ்வளவும் பெற்ற பிறகும் மனதில் நல்ல காரியங்களையே செய்ய வேண்டுமென்ற சிந்தனை வேண்டும். இவ்வாறான சிந்தனையின் அடிப்படையிலேயே எமது மாணவச் செல்வங்கள் இந்த முயற்சியை எடுத்துள்ளனர். "ஒளியைக் காண்போம்" என்ற மகுட வாசகத்தைக் கொண்டு வளர்ச்சி கண்டுவரும் எமது வித்தியாலய மாணவர்களின் இரண்டாவது சஞ்சிகையாகிய இப் படைப்பு வருடந்தோறும் புதுப் பொலிவுடன் ஊற்றெடுக்க வேண்டும். இதற்கு இறையருளும் ஆசான்களின் வழிகாட்டலும் மாணவர்களின் ஊக்கமும் என்றும் நிலைபெற வாழ்த்து கின்றேன்.

**இரா. ஸ்ரீநடராசா**
அதிபர்
யா/தொண்டைமானாறு வீ.ம.வி

**15.07.2016**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பாடசாலைக்கீதம் | |
| அதிபர் வாழ்த்துச் செய்தி | |
| இதழாசிரியர்கள் எண்ணத்திலிருந்து | |
| எல்லையில்லா நீலவானம் | 01 |
| எல்லைகள் தாண்டிப் பயணிப்போம் | 02 |
| கண்டற்காடுகள் | 03 |
| எஃகுப் பறவைகள் | 05 |
| பிரியமுள்ள நண்பனுக்கு | 07 |
| நட்புக் கரங்களைப் பலப்படுத்துவோம் | 08 |
| எமது இலட்சியக் கனவு | 09 |
| உங்களுக்காய் எங்கள் குரல் | 10 |
| மதுவை ஒழிப்போம் | 11 |
| இன்றைய உலகமும் இளைஞர் சமுதாயமும் | 13 |
| தவறை உணர்ந்தவரே மனிதர் | 15 |
| வாத்தியார் அழுதார் | 16 |
| தேடல் | 18 |
| வாய்விட்டுச் சிரிக்க | 19 |
| அன்பு | 19 |
| நட்புக்கு தன்னலம் இல்லை | 20 |
| முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் | 21 |
| தமிழ் அறிவோம் | 22 |
| சிறுவர்களது உரிமைகளை | 29 |
| சிந்திக்க சில சிந்தனைத் துளிகள் | 31 |
| வாசிப்புப் பழக்கம் | 32 |
| உயர்தர மாணவர் மன்றம் - செயற்குழு 2016 | 34 |

## இதழாசிரியர்கள் எண்ணத்திலிருந்து....





எமது வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் "கலை ஊற்று" என்ற சஞ்சிகையின் இரண்டாவது இதழில் சந்திப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். 2016 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள எங்கள் சகோதரர்களை வாழ்த்தி வழியனுப்பும் ஒன்றுகூடல் நிகழ்வில் இம்மலர் வெளிவருவது மற்றுமொரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

இந்த இதழில் உயர்தரம் கற்கும் மாணவர்களின் கன்னி ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. "மாணவர்கள் ஆக்கத்திறன் உள்ளவர்களாக தம்மை வளர்த்துக்கொள்ளவேண்டும்" என்று எமது ஆசிரியர்கள் அடிக்கடி எம்மை வலியுறுத்துவதற்கு ஏற்ப எமக்குள் உதித்த எண்ணங்களுக்கு எழுத்துவடிவமும் ஓவிய வடிவமும் கொடுத்து உங்கள் முன் கொண்டு வந்துள்ளோம். அவற்றை ஏற்று வழிப்படுத்த வேண்டியது உங்கள் அனைவரின் கடமையுமாகும். இந்த இதழில் கவிதைகள், கதைகள், கட்டுரைகள், ஓவியங்கள், மற்றும் பல்சுவை அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்விதழின் ஆக்கத்திற்கு துணையாக நின்ற அனைத்து நண்ப நண்பியருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இவ்வாறான ஒரு இதழ் வரவேண்டும் என்று விரும்பிய எமது வித்தியாலய அதிபர் இரா ஸ்ரீநடராசா அவர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கிய ஆசிரியர்களுக்கும், இதழின் வரவுக்கு உறுதுணையாக நின்ற பொறுப்பாசிரியர் திரு சு. குணேஸ்வரன் அவர்களுக்கும் இதழை வடிவமைத்துத் தந்த திரு சு. சிவனேஸ்வரன் அவர்களுக்கும், தட்டச்சில் உதவிய செல்வி செ. செல்வரஞ்சினி, திருமதி பி. வினுசியா ஆகியோருக்கும் அச்சுப்பதிப்பில் உதவிய ஆகாயம் பதிப்பகம், வசந்தம் நெற்கொம், தமிழ்ப்பூங்கா அச்சகம் ஆகியோருக்கும் அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இணை இதழாசிரியர்கள்**
**ச.சுரேந்தினி (தரம் 13, கலை 2017)**
**இ.சந்துஜா (தரம் 12, கலை 2018)**

# எல்லையில்லா நீலவானம்



எழுத்தாணி கொண்டு
வரையமுடியாத காவியம்
நம் நட்பு.
அளவுகோல் கொண்டு
அளந்திட முடியாத ஆழ்கடல்
நம் நட்பு.
அகிலம் உள்ளவரை
உடலால் பிரிந்தாலும்
உயிரால் பிரியாதது
நம் நட்பு.
என்றும் நிலைத்திருக்கும்
எல்லையில்லா நீலவானம்
நம் நட்பு.

**செல்வி இ. உதயராஜினி,**
*தரம் 13,கலைப்பிரிவு - 2017*

# எல்லைகள் தாண்டிப் பயணிப்போம்



கல்லாக இருப்பவரை
சிலையாக்குவது கல்வி
வெள்ளைக்காகிதமாக இருப்பவரை
ஓவியம் ஆக்குவது கல்வி
கல்வியெனும் கடலில்
நாம் தத்தித்தவளும் சிறுகுழந்தைகள்
பெற்றெடுத்த தாயோ
பத்துமாதம் சுமந்தாள்.
கல்வியோ,
எம்மை வாழ்நாளெல்லாம் சுமக்கிறது.
கல்வியெனும் மரத்தின் வேர்
சுவைக்கச் சுவைக்கச்
கசப்பாகத்தான் இருக்கும்
அதன் கனியின் ருசியோ
இனிமையாக இருக்கும்.
வாருங்கள்
கல்விக்கடலில் துடுப்புடன் இறங்குவோம்.
எல்லைகள் தாண்டிப் பயணிப்போம்.

செல்வன் பி.பிரகலாதன்,
தரம் 12,கலைப்பிரிவு 2018



# கண்டற்காடுகள்

கண்டற்தாவரங்கள் கடலின் கரையோரங்களில் உள்ள சதுப்பு நிலங்களில் உவர்நீரில் வளரும் அதிசயத் தன்மை கொண்ட தாவரங்களாகும். கண்டற்சூழற் தொகுதியில் காணப்படும் வைரம் செறிந்ததும் வித்துக்களில் சிறந்த இசைவாக்கங்களைக் கொண்டதும் வாவி, களப்பு, பொங்கு முகங்கள் போன்றவற்றின் அலையடிப்பு பிரதேசங்களுக்கு இடையில் வளர்வதுமான தாவரங்களை கண்டல்கள் என வரையறுக்கலாம்.

உலகிலேயே மிகப்பெரிய கண்டற்காடு மேற்குவங்கத்தின் சுந்தரவனக்காடே ஆகும். இலங்கையில் மிகப்பெரிய முதலாவது கண்டற்காடு புத்தளத்தில் உள்ள குடாப்பகுதியைச் சார்ந்தது.

கண்டல்காடுகளை அலையாத்தித்தாவரம் சதுப்புநிலக்காடு வெள்ளக்காடு எனப்பலவாறு அழைக்கப்படுகிறது. அலையாத்தித் தாவரங்கள் கிட்டத்தட்ட எண்பது இனங்கள் காணப்படுகின்றன. கண்டல் தாவரங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம். சிவத்தக்கண்டல், கறுப்புக்கண்டல், தேன் கண்டல், போன்றன ஆகும். அத்துடன் கண்டல் தாவரங்களாக கன்னா, புருகெய்ரா, நிபாபாம், நரிக்கன்னா, தில்லை, கழுதைமுன்னி, நிப்பரந்தை, பன்னுக்குத்தி, சிறுகண்டல், நெட்டை, சுராபுண்ணை போன்றனவாகும்.

அலையாத்தித் தாவரங்கள் செப்ரொம்பர் முதல் நவம்பர் வரை பூக்கும் தன்மை கொண்டவை. இம்மரங்களில் வேர்கள் நீரிலுள்ள உப்பை வடிகட்டும் தன்மை கொண்டவை. அதையும் தாண்டி தாவரத்தில் புகும் உப்பை இலையுள்ள உப்புச் சுரப்பிகள் வெளியேற்றிவிடுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் அண்ணளவாக 6000 8000 ஹெக்டேயர் பரப்பை உள்ளடக்கியதாகும். இலங்கையில் இரண்டாவது அலையாத்திக்காடு மட்டக்களப்புப் பகுதியைச் சார்ந்தது. இலங்கையில் 40 இனங்கள் மட்டுமே கண்டல் தாவர இனங்களாக காணப்படுகின்றன.

யாழ் மாவட்டத்தில் குறிப்பாக நாகர்கோயில் பகுதி அரியாலைப்பகுதி, தொண்டைமானாற்றுப் பகுதி, மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளிலும் முல்லைத்தீவின் கொக்குளாய் நாயாறு, ஆகிய பகுதிகளிலும் மன்னாரில் திருமலை மூதூர் ஆகிய பகுதிகளிலும் மட்டக்களப்பில் கதிரவெளி, காரைதீவு, வாழைச்சேனை, பொத்துவில் ஆகிய இடங்களிலும் கண்டற்காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன.

**கண்டல் காடுகளின் பயன்களாவன :**

சுனாமிப்பேரலையை தடுப்பதற்காகவும் கண்டற்காடுகள் மிகவும் இன்றியமையாத காரணியாகின்றன.

கண்டற்தாவரங்கள் பறவைகளின் வாழிடமாகவும் மரத்திலிருந்து விழுகின்ற இலைகள், குச்சிகள் என்பவற்றைக்கொண்டு கூடுகள் கட்டி அக்கூட்டிலே முட்டையிட்டு ஒட்டிவாழ்கின்றன.

நீரில் விழுந்து அழுகும் போசணை மிகுந்த தாவரப்பாகங்கள் அலையடிப்பினால் நுண்ணங்கிகளுக்கு கொடுக்கப்பட்டு அந்தப் போசணைப் பதார்த்தங்கள் அழுகலுக்கு உட்பட்டு அழுகல் வளரிகள் உணவுச்சங்கிலியின் முதற்கொழுவியாக தொழிற்பட்டு மீன்கள் போசிக்க உதவுகின்றன.

கண்டல் மரங்களின் இலைகள் நுணிக்காம்பு, வேர்கள், ஆகியவை மருத்துவத்திற்காகப் பயன்படுகின்றன.

கண்டற்தாவரத்தின் வேர்கள் சாயமூட்டுவதற்குப் பயன்படுகி ன்றன.

கண்டல் தாவர வகைகளில் காணப்படும் நிபா புறுட்டிகன்ஸ் என்ற நிபாவிலிருந்து வினாகிரி அற்ககோல் தயாரிக்கின்றனர்.

கண்டல் தாவர வகைகளில் காணப்படும் பன்னம் என்ற அக்றொஸ்ரிகத்தின் இளந்தளிர்கள் கறி சமைப்பதற்காப் பயன்படுத்தப் படுகின்றது.

கண்டல் சூழற்தொகுதியில் உள்ள மொலஸ்காக்களின் ஓடுகள் சுண்ணாம்பு உற்பத்திக்கு பயன்படுகின்றது.


அவிசினியா (கன்னா) போன்றவற்றின் இலைகள் விவசயத்தின் பசுந்தாட் பசளையாக பாவிக்கப்படுகின்றன.

கண்டல் காடுகளின் கிளைகள் விறகுக்காகப் பயன்படுத்தப் படுகின்றது.

எனவே, உலகில் மிக வேகமாக அழிந்து வரும் இனத்தின் இந்தக் கண்டற் தாவரங்களும் அடங்கும். இவை உயிர்ப்பல்வகைமையை பேணுவதில் மிகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே, இவற்றைப்பாதுகாப்பது இலங்கை அரசினதும் மக்களதும்மிக முக்கிய கடமையாகும்.

"கண்டல் மரங்கள் அல்ல. கரங்கள்"

செல்வி கோ. ஶ்ரீஜினி,
தரம் 13 கலைப்பிரிவு 2017



## எஃகுப் பறவைகள்

பட்டப்பகலிலும் கூட இருண்டுபோய் இருந்த வானத்தில் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்த பேரிரைச்சலால் மாத்தளன் கிராமமே அதிர்ந்து கொண்டிருந்தது. வெண்மணற்பரப்பையும் மூடி நிறைந்திருந்த மனிதத் தலைகளுக்கு மேலாக மிக நெருக்கமாகப் பறந்து கொண்டிருந்த கிபிர் குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகளும் தொடர்குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன.

அந்தப் போர்வானூர்திகளின் கர்ணகடூரமான ஓசையையும் கடந்து அங்குமிங்குமாகச் சிதறி அலைந்து கொண்டிருந்த மக்களின் அவலக் குரல்களின் அதிர்வுகள் மீண்டும் மீண்டும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

"ஓடுங்கோ... ஓடுங்கோ... கிபிர் தாளப் பதியிறான்.. ஐயோ குண்டுகளைப் போடப்போறான்.."

எந்தப் பாதையினால் ஓடுவது எந்த வழியால் தப்பித்து வெளியேறுவது என்று தெரியாது மக்கள் ஓடும் திசைக்கு எதிராக இன்னுமொரு மக்கள் கூட்டம் மாறி மாறி ஓடுவதுமாக இருந்தது. அந்தக் காட்சிகள் நாங்கள் படித்த பண்டைய இதிகாசகாலப் போர்க்களக் காட்சிகளை நினைவுபடுத்திக்கொண்டிருந்தன.

"ஐயோ... அம்மா... என்ரை கால்..."

ஒரு சிறுமியின் அந்த அவலக்குரல். சிதறியபடி அவலக்குரல் எழுப்பி ஓடிக்கொண்டிருந்த மக்களில் எவருக்குமே கேட்டதாகத் தெரியவில்லை. ஹெலிகளும் கிபிர் மற்றும் சுப்பர் சோனிக் குண்டுவீச்சு விமானங்களும் அந்தப் பிரதேசத்தில் வட்டமிடத் தொடங்கியதும் அந்த மக்களின் "ஐயோ ..ஐயோ..." என்ற அவலக் குரல்கள் ஒய்ந்த பின்னர்தான் ஒரு மயான அமைதி நிலவியது.

அதற்குப் பிறகுதான் எல்லா உணர்வுகளுமே தொழிற்படத்

தொடங்கின. கூட்டத்தில் கூட்டமாக சிதறி ஓடிக் கொண்டிருந்த மக்களில் ஒருத்தியாக ஓடிக்கொண்டிருந்த ஒரு சிறுமியின் காலில் ஹெலியில் இருந்து ஏவப்பட்ட கலிபர்த் துப்பாக்கியின் குண்டு பாய்ந்ததும் அவளுடைய கால் துண்டாகியது. காயத்தின் வேதனையால் தனது கால் பறிபோனது பற்றி அவளால் உணரமுடியவில்லை. காலில் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்வதாகவே அவள் நினைத்திருந்தாள்.

ஓடியோடிக் களைத்துவிட்ட எனது தங்கை லிசா முனங்கிக் கொண்டிருந்தாள் அந்தப் பிஞ்சுப் பாலகியின் கெஞ்சல் என்னுடைய இதயத்தையே உலுப்பிட்டது, கடந்த நான்கு நாட்களாக எந்தவிதமான உணவும் இன்றி ஓடுவதும் நடப்பதும் பதுங்குகுழிக்குள் பாம்புபோல் ஊர்ந்து திரிவதுமாகவே சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த என்னுடைய தங்கையின் பிஞ்சுக் கால்களை தடவிப் பார்த்த எனக்கு நெஞ்சில் முள் தைத்ததுபோலிருந்தது.

அந்த இடத்தில் இருந்த மண் திட்டியின்மேல் எனது தங்கையையும் அம்மாவையும் இருக்கச் சொல்லிவிட்டு எனது காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சே...இந்த வானம், இந்தக் கடல், இந்த மண்.. ஒரு காலத்தில் எப்பிடி எப்பிடியெல்லாம் இருந்தது. எப்பிடியெல்லாம் வாழ்ந்தோம். அதனை நினைத்துப் பார்த்தபோது கதறி அழவேண்டும்போல் இருந்தது.

நாங்கள் விரைந்து கொண்டிருக்க மீண்டும் கிபிர் விமானங்களின் இரைச்சல் காதுகளை செவிடாக்கியது. கரும்புகை மண்டலமே எங்களுடைய கண்களை மறைத்தபடி வானத்தை நோக்கிப் பரவியது.

எங்களுக்கு சற்றுத் தூரத்தில் எங்களைப்போலவே அவலப்பட்டுக்கொண்டு ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்த அந்தச் சிறுமியையும் அவளுடன் கூடவேயிருந்த உறவினர்களையும் திரும்பிப் பார்த்தேன்.

அங்கே அந்த மனிதர்கள் இருந்த இடத்தில் எந்த ஓசையும் கேட்கவில்லை.

செல்வன் பி.பிரகலாதன்

*தரம் 12, கலை 2018.*

# பிரியமுள்ள நண்பனுக்கு...



பிரியமுள்ள நண்பனே,
பிரியமுடன் எழுதுகிறேன் ஒரு கவி.
பிடித்திருந்தால் படித்துவிடு
இல்லையென்றால் மூடிவிடு.
நம் நட்பை
இறைவழிபாட்டை
நிலை நிறுத்திக்கொள்.
உன் இறுதி மூச்சுவரை
கல்வியில் கண்டிப்பாயிரு.
உன் எதிர்காலம் அதுவே.
உள்ளம் அலையும் எண்ணத்தை
ஒத்திவை.
பல கலைகளையும் கற்றுக்கொள்
பாரில் படித்துப் பட்டம்பெறும் வரை
ஓய்ந்துவிடாதே
உனக்கொன்று ஒரு
நல்வாழ்வு காத்திருக்கும்.

செல்வன் அ. விதுஷன்,
தரம் 12, கலைப்பிரிவு 2018

# நட்புக் கரங்களைப் பலப்படுத்துவோம்



அன்பின் மறுவடிவம்
ஆண்டவன் தந்த கொடையில் ஒன்று
அதுவே நட்பெனும் மூன்றெழுத்து.
தோள்சாயும் போது தோள் கொடுப்பது
நட்பு வாழ்க்கையில் பாலம் போன்றது
உலகத்தில் பூக்காத ஒரே பூ
பள்ளத்தில் விழும்போதெல்லாம்
கைகொடுத்துத் தூக்கிவிடும் நட்பெனும்
கரங்களைப் பலப்படுத்துவோம் வாரீர்.

*செல்வி சி. கஜந்தினி,*
**தரம் 12, கலைப்பிரிவு 2018**



# எமது இலட்சியக் கனவு


கனவு என்பது எமது இலட்சியத்தினை நோக்கி அல்லது எம் எதிர்காலத்தை நோக்கியதாக இருக்கவேண்டும். அவை எவ்வாறான கனவு என்றால் எம் வாழ்வுக்கும் சிறந்த படிக்கட்டுக்களாக அமைய வேண்டும். நாம் காணும் கனவுகள் தூக்கத்தில் காண்பவை அல்ல. எம் வாழ்வு சிறப்பதற்காகவும் எம் இலக்கினை அடைவதற்காகவும் காணப்படுபவையாக அமையவேண்டும். அவ்வாறான நல்ல கனவுகளை காணவேண்டும். நாம் காண்பதற்கான பல்வேறு விதமான கனவுகளை நோக்கலாம். அதாவது கல்வியில் சிறந்தவனாக வரவேண்டுமென்று காணலாம். இல்லாவிடின் தொழில் முயற்சிகளில் உயர்வடையவேண்டுமென்றும் புதிய கண்டுபிடிப்புக்களை கண்டுபிடிக்க வேண்டும் என்றும் கூட நாம் கனவு காணலாம்.

இவ்வாறு பலவற்றினைக் குறிப்பிடமுடியும். ஆனால் இவற்றை எல்லாம் கண்டால் போதாது. அதை நாம் செயற்படுத்திக்காட்ட வேண்டும். இல்லாவிடில் கனவு காண்பதில் பிரயோசனம் இல்லையென்று டாக்டர் அப்துல்காலம் கூறியுள்ளார். மற்றும் பாரதி காந்தி, நெல்சல் மண்டேலா, அன்னை திரேசா, நீல் ஆம்ஸ்ரோங், போன்றோரும் கூறியுள்ளனர். இவர்கள் தமது வாழ்க்கையில் கண்ட கனவுகளை நியாயப்படுத்தி உள்ளனர். முயற்சி என்றும் வெற்றியைத் தரும் என்ற வாக்கை நாம் கருத்திற் கொள்வோம். மாணவர்களாகிய நாம் காணும் கனவானது ஒரு நொடியில் அழிந்துவிடும் கனவாகும் எம்மால் முடியாதது என்று நினைக்கக்கூடாது. அவ்வாறு நினைத்தால் அதை அடியோடு அழியுங்கள். முடியும் என்று நினையுங்கள். இன்று உலகம் போற்றும் சாதனையாளராக மாறுவீர்கள் காலஅசுரனானவன் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறான். அவன் பிடியில் நாம் சிக்கிக் கொண்டு இருக்கின்றோம். இதிலிருந்து நாம் மீண்டு வெளியே வரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தான் சாதிக்கப் பிறந்தவன் தளர்ந்து போகக்கூடாது என்று நினைத்து சிறந்த மனிதன் என்ற பேரைப்பெற்று உலகத்தாரால் போற்றப்படவேண்டும். இவற்றின் மூலம் நாம் கூற விழைவது யாதெனில் நாம் நம் இலக்கினை அடைவதற்கான கனவுகளை நன்றாகக் காணவேண்டும். அத்தோடு நின்றுவிடாமல் எம் கனவு சீராக எழுந்து மேலும் ஊக்கப்படுத்தி நாம் பல விடயங்களை கடைப்பிடிக்கவேண்டும்.

விழுமியப்பண்புகளை கடைப்பிடிப்பின் வாழ்வு வசந்த ஒளியினால் அசைபோடும். தூக்கத்தில் வருவது கனவல்ல. உன்னைத் தூங்கவிடாமல் செய்வது கனவு என்ற அப்துல்காலம் கருத்தை உண்மையாக்குவோம். நாம் வாழ்க்கையினைச் சந்தோசமாகக் கழிக்கவேண்டுமென்றால் சிறந்த கனவுகளைக் காணவேண்டும்.

*செல்வன் பி. பிரகலாதன்*
**தரம் 12, கலைப்பிரிவு 2018**


# உங்களுக்காய் எங்களின் குரல்



அடுப்பங்கரையில் அமர்ந்திருந்த நீ
விடுதலைபெற்றுவிழிந்தெழுந்தாய்.
ஆனாலும் இன்னமும் சிலரால்
சித்திரவதைப்படுகிறாய்
சின்னஞ்சிறிய பிஞ்சுகள்
திசைமாறிய வரலாற்றை
என்னவென்று சொல்வது?
வஞ்சகம் கொண்டோரும்
பாதி வழியில் உயிர் பறித்துச் செல்வோரும்
இன்னமும் இந்த உலகத்தில்
முகமூடிகளோடு உலாவருகின்றனர்.
வாருங்கள்
நல்ல மனிதர்களைப் போற்றுவோம்
முகமூடி மனிதர்களைக் கிழித்தெறிவோம்.
எங்கள் சோதரரே
உங்களுக்காய் எங்கள் குரல்
இன்னமும் ஓங்கி ஒலிக்கும்.

செல்வன் க. வினோத்
தரம் 12, கலைப்பிரிவு 2018

## மதுவை ஒழிப்போம்



நமது நாடான இலங்கையிலே கொலை, களவு, கொள்ளை முதலிய பாதகச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இந் நிலையை நாளிதழ்களில் வெளியாகும் செய்திகளைக் கொண்டும் ஆண்டுதோறும் பொலிஸ் பகுதியினர் வெளியிடும் அறிக்கைகளைக் கொண்டும் தெளிவாக உணரலாம். நாட்டின் நற்பெயருக்கு மாசுபடுத்தும் இந்நிலைக்கு காரணங்கள் பலவுள்ள. அவற்றுள் சிறப்படைய காரணமாய் அமைவது மதுபானம், கள், சாராயம், கஞ்சா, அபின், பிராண்டி, விஸ்கி முதலியன பலவேறு உருவங்கொண்ட மது வகைகளே. மது அறிவை மயக்குவது கொடிதினும் கொடியது. இவ் உண்மைகளை நன்குணர்ந்தும் மக்கள் மதுவை அருந்துகிறார்களே. ஏன்? அதற்குக் கூறப்படும் காரணங்கள் வெகு விசித்திரமானவை துன்ப துயரங்களினாலும் வாழ்வில் ஏற்படும் பலவகை இன்னல்களினாலும் மனம் அமைதியிழந்து தவிக்கும் போது அவற்றை எல்லா மறந்து சிறு பொழுதாயினும் மனம் சாந்தியடைவதற்காகச் சிலர் மதுவை அருந்துகின்றார்களாம்! வாழ்க்கைப் போராட்டத்திலே சிக்கி இன்பமெங்கே இன்பமெங்கே என்று ஏங்கித் தவித்து அதைக்காணும் வழியறியாத சிலர் மயக்க நிலையில் ஒருவகை இன்பம் அனுபவிப்பதற்காகக் குடிக்கிறார்களாம்! அறிவுக்குப் பொருந்தாத விந்தைக் காரணங்களைச் சொல்லிக் கொண்டு மது அருந்துபவர்கள், நாளடைவிலே பழக்கங் காரணமாக மதுவுக்கு மீளா அடிமைகளாகி, வாழ்நாளை வீழ்நாளாக்குகின்றனர்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார் அத்துணைச் சிறப்புடையது மனிடப் பிறவி மனிதனை மனிதனாக்கிச் சிறப்புத் தருகின்ற அறிவை மயக்கி, மிருகநிலைக்குத் தள்ளும் எப் பொருளாயினும் விலக்கப்பட வேண்டியதே, அதுவும் மனிதனது சீரிய அறிவை மயக்கி, அவனை விலங்கு நிலைக்குத் தாழ்த்தி விடுவதனால் கண்டிப்பாக ஒதுக்கப்பட வேணடியதொன்றாகிறது.

பாதகங்களின் நடுநாயகமாக மது விளங்குவதோடு மதுவுண்டோரின் அறிவு மயங்குவதனால் அவன் நன்மை தீமையுணராமல் குருதி ஓட்ட வேகங்கூடுவதனாற் காமுகனாக மாறிப் பாதகச் செய்களை செய்யத்துணிகிறான்.

மதுவருந்தும் பழக்கமுடையோன், பாடுபட்டுச் சம்பாதித்த பொருளை மதுவுக்காகச் செலவிடுகிறான். ஆதனால் அவனுழைப்பை நம்பியிருக்கும் மனைவி, பிள்ளைகள் பசிபசியென்று அடித்துப் புலம்பவேண்டிய நிலை ஏற்படுகின்றது. மங்கையர் மங்கலமாக உயிராய் போற்றும் தாலியினையும் பறிக்கத் துணிகிறானென்றால் மதுவின் தொடுகை எத்துணையதென்று வர்ணிக்க முடியுமா? இந்நிலையில் இன்பமும் அமைதியும் நிலவவேண்டிய குடும்ப வாழ்வு சகிக்க முடியாத நரகத் துன்பமாய் மாறி விடுகின்றது.ஆகவே, குடும்ப வாழ்க்கையைக் கெடுத்து அதனை நாசமாக்குங் குடி விலக்கப்பட வேண்டியதாகிறது.

நம் ஈழத்திரு நாட்டிலேயும் மது ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. இங்கும் மதுவிலக்கு வேண்டுமானால் மது அருந்தும் மக்களிடையே மனமாற்றம் ஏற்படவேண்டியது மிக அவசியம். எனவே மக்களிடையே நல்லுணர்வு வளர்ந்து வரும்போது மதுவிலக்குச் சட்டத்தினால் பெரும் பயன் விளையாமல் பாமர மக்களிடையே மதுவின் தீமைகளைப் பற்றி பலபல வழிகள் மூலம் பிரசாரம் செய்தல் வேண்டும்.

மதுவை ஒழித்து தனிமனிதன் நோயற்ற சிறப்பான வாழ்வு வாழ்வான். குடும்பங்கள் அமைதியும் பொருள் வளமும் பெற்றுச் சீர்பெறும் அதனால் நாடும் நலமுறும். மதுவை ஒழித்து சந்தோசமான வாழ்வை வாழ்வோமாக.

*செல்வி சி.சஜிதா*

***தரம் 12, கலைப்பிரிவு 2018***



## இன்றைய உலகமும் இளைஞர் சமுதாயமும்

இன்று நாங்கள் நவீன யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அது தொழில்நுட்ப மயமாக மாறியுள்ளது. அறிவியல் சார்ந்த உலகத்தில் கல்வி, தொழில்நுட்பம் போன்ற சிறந்த நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் அதற்கு எதிர்மாறான செயற்பாடுகளும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. போதைப்பொருட்பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், கொலை, கொள்ளை போன்ற தகாத செயல்களால் கீழான மக்களும் இந்த உலகில் இணைந்து வாழ்ந்து இந்த உலகில் வாழும் மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றனர்.

அறிவியல் உலகத்தில் வாழ்கின்ற இளைஞர்கள் பெரிதும் கல்வியில் தமது நாட்டத்தைச் செலுத்துகின்றார்கள். இளைஞர் சமுதாயம் தொழில்நுட்பக் கல்வியில் பெரும் ஆர்வங்காட்டி அனைத்தையும் இலகுவாகக் கற்றுக்கொள்கிறார்கள். ஆரம்பகாலங்களில் அலுவலகங்களில் தமது தேவைக்காகத்தான் தொலைபேசியைப் பயன்படுத்தினார்கள். இன்று சாதாரண மக்கள் பயன்படுத்தும் அளவுக்கு தொலைபேசியின் பாவனை அதிகரித்துள்ளது. ஆனால் தற்போதைய அறிவியல் யுக இளைஞர்கள் அனைத்து தொழில்நுட்பவியல் சாதனங்களையும் இலகுவான முறையில் கையாளத்தெரிந்துள்ளமை வரவேற்கத்தக்கதுதான்.

இவ் உலகம் இவ்வாறிருக்க, மற்றொரு சாரார் சமூகத்திற்கு அந்நியமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். கொலை, கொள்ளை போன்ற அகோரச் செயல்களையே செய்து வருகின்றனர். அதனால் பெரும் விளைவுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான கொடூரமான செயல்களைச் செய்வதனால் பலருக்குப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறானவர்களுக்கு எங்களால் எந்தவித தண்டனையையும் வழங்கமுடியாது. ஆனால் இப் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக அரசாங்கத்தினால் சட்டங்கள் விதித்தல் மற்றும் தண்டனை வழங்குதல்

ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். இதேபோன்று தான் அறிவியல் உலகத்தில் வாழும் மக்கள் தகாத செயல்களுக்கு உட்படக்கூடாதென்று சட்டங்கள், ஆலோசனைகள் என்பன வழங்கப்படுகின்றன.

இவ்வுலகமானது இளைஞர்களுக்கே பெரும் மதிப்புக் கொடுக்கின்றது. ஏனெனில் இவ் இளைஞர்களால்தான் பிற்காலத்தில் இவ்வுலகம் இன்னும் வளர்ச்சியடையும். ஆகவேதான் இன்றைய இளைஞர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆம் அது உண்மைதான். எனவே இன்றைய இளைஞர்கள் தவறான வழியில் செல்லாமல் வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை தரக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அப்போதுதான் மிகுந்த நம்பிக்கையோடு இளைஞர்களின் கைகளில் நாட்டை ஒப்படைக்கமுடியும். இல்லையெனில் குவிந்திருக்கும் குப்பைமேடாக இந்த நாட்டிலும் தேவையற்ற செயற்பாடுகள் மலிந்துவிடும்.

எனவே இளைஞர்களை நல்வழிப்படுத்தவேண்டியது சமூகப் பெரியோரதும் பெற்றோரதும் சமூக நலன்விரும்பிகளினதும் தலையாக கடமையாகும். அதேபோல பெரியவர்களின் வழிநடத்தலை ஏற்று அதன்படி ஒழுகவேண்டியதும் இளைஞர்களின் பொறுப்புமாகும். அவர்கள் பிழையான பாதைகளில் செல்லும்போதெல்லாம் அவர்களை நல்வழிப்படுத்தி நாட்டுக்கு நலன் பயக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். அதற்குரிய முதற்பணியை மேற்கொள்வோர் பெற்றோர்களும் ஆசிரியர்களுமே. இதனை இன்றைய இளைஞர்கள் புரிந்து கொண்டால் நாட்டில் நன்மை விளையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

**"இன்றைய இளைஞர்களே நாட்டின் நாளைய தலைவர்கள்"**

*செல்வி சி.பாமினி,*
***தரம் 12, கலைப்பிரிவு 2018***

# தவறை உணர்ந்தவரே மனிதர்

அன்பு மனம் கொண்டோர் தேவராகிறார்
ஆணவம் கொண்டோர் அசுரராகிறார்
ஈகைக்குணம் உடையோர் பாரியாகிறார்
உண்மை பேசுவோர் உத்தமராகிறார்

ஊருக்கு உழைப்பவன் உபகாரியாகிறான்
ஏமாற்றி வாழ்பவர் எத்தராகிறார்
ஓடியோடி உழைப்பவன் செல்வனாகிறான்
ஒன்றுமே இயலாதவன் சோம்பேறியாகிறான்

ஐயமின்றிக் கற்றோர் அறிஞராகிறார்
ஆண்டவனை வணங்குவோர் புனிதராகிறார்
ஆபத்தில் உதவுவோர் நேசராகிறார்
தவறுகளை உணர்ந்தவன் மனிதனாகிறான்

செல்வன் இ. லவதீபன்,
கலைப்பிரிவு 2018



பா. பாஸ்கரன்

*(முதுபெரும் எழுத்தாளர் வரதரின் "வாத்தியார் அழுதார்" என்ற இச் சிறுகதை மாணவர்களுக்கான மாதிரிச் சிறுகதையாக அமைந்துள்ளமையால் தேவை கருதி பிரசுரிக்கப்படுகிறது)*

# வாத்தியார் அழுதார்

*- வரதர்.*

பள்ளிக்கூடம் விடுகிற நேரம். நாலாம் வகுப்புக்குக் கடைசிப்பாடம் வரைதல். முருகேசு உபாத்தியாயர் கரும்பலகையில் ஒரு பெரிய பூசினிக்காயின் படம் வரைந்திருந்தார். அதைப்பார்த்து மாணவர்கள் கொப்பிகளில் வரைந்து கொண்டிருந்தார்கள்.

சுந்தரம் அந்த வகுப்பிலேயே முதலாம் பிள்ளை. அவனுடைய "ஆட்டுப்புழுக்கைப்" பென்சிலாலே ஒருமாதிரி பூசினிக்காய்க்கு உருவம் போட்டு விட்டான். அதன் ஒரு பக்கம், மறுபக்கத்திலும் பார்க்கக் கொஞ்சம் "வண்டி" வைத்துவிட்டாற் போலிருந்தது. அழித்துக் கீறலாமென்றால் அவனிடம் றப்பர் இல்லை. பக்கத்திலிருந்த "தாமோரி"யிடம் இரவல் கேட்டான். தாமோரி, தன்னுடைய பெரிய "ஆர்ட்டிஸ்ற் றோய்ங்" கொப்பியிலே புத்தம்புதிய வீனஸ் பென்சிலால், பூசினிக்காயென்று நினைத்துக் கொண்டு பனங்காய் மாதிரி ஏதோ ஒரு உருவம் போட்டுக் கொண்டிருந்தான். சுந்தரம் வடிவாகக் கீறியிருப்பதைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு எரிச்சலாக இருந்தது. ஒரு பக்கம் கொஞ்சம் வண்டியாக இருப்பதையும் சுந்தரம் அழித்துத் திருத்துவதை அவன் பொறுப்பானா? "போடா! என்னுடைய றப்பர் தேய்ஞ்சுபோம் நான் தரமாட்டேன்" என்றான்.

சுந்தரம் விரலிலே சாடையாக எச்சியைத் தொட்டு பிழையான கோட்டை அழிக்க முயன்றான். இதுகூடப் பொறுக்கவில்லை தாமோரிக்கு. டக்கென்று எழுந்து, "வாத்தியார்!" என்று ஒரு பெரிய சத்தம் போட்டான்.

மத்தியான இலவச போசனத்தை அரசாங்கத்தார் நிறுத்தப் போவதைப் பற்றிப் பத்திரிகையிலே வாசித்துக் கொண்டிருந்த உபாத்தியாயர் தாமோரி போட்ட சத்தத்தில் நிமிர்ந்து "என்னது?" என்றார்.

"வாத்தியார், இங்கே சுந்தரம்....... எச்சிலைத் தொட்டுப் படத்தை அழிக்கிறான்!"

முருகேசு உபாத்தியாயர் அந்த ஊர் மனுசர்தான். அவருக்குப் பணக்கார வீட்டுப் பிள்ளையான தாமோரியையும் தெரியும் தந்தையை இழந்தவுடன் ஏழைப் பிள்ளையாகிவிட்ட சுந்தரத்தையும் தெரியும். அதோடு இருவரின் குணத்தையும் நன்றாக அறிவார்.

"இங்கே வா சுந்தரம்!" என்றார்.

படபடக்கும் நெஞ்சோடும், அதைப் பிரதிபலிக்கும் முகத்தோடும், இயற்கையாகவே மெலிந்த உடம்போடும் சுந்தரம் வந்தான்.

"நீ எச்சில் தொட்டு அழித்தாயா?" -

சுந்தரம் பதில் சொல்லுமுன்பே தாமோரி எழும்பி, "நான் பார்த்தேன் வாத்தியார்!" என்றான்.

"நீ இரடா அங்கே! உன்னை யாரடா கூப்பிட்டது?" என்று விழித்துப்பார்த்த உபாத்தியாயரின் கண்ணில் பொறி பறந்தது! அதைப் பார்த்ததும் சுந்தரத்தின் உடம்பு பதறத் தொடங்கிவிட்டது.

ஆனால் திரும்பிச் சுந்தரத்தைப் பார்த்த உபாத்தியாயரின் முகத்தில் கருணை தவழ்ந்தது. "இங்கே வா, சுந்தரம்" என்று அவனைப் பக்கத்தில் கூப்பிட்டு முதுகில் லேசாகத் தட்டினார். "நீ எச்சில் போட்டாயா?" என்றார்.

"என்னிடம் றப்பர் இல்லை வாத்தியார் அம்மாவிடம் காசும் இல்லை!" என்ற சுந்தரத்தின் கண்களில் நீர் நிறைந்து விட்டது.

"றப்பர் இல்லாவிட்டால் எச்சில் போடக்கூடாது..." என்றார் உபாத்தியாயர். ஆனால் வேறு என்ன செய்யச் சொல்லலாம் என்று யோசித்தவருக்கு ஒரு யோசனையும் ஓடவில்லை. குனிந்து பார்த்தவர் சுந்தரத்தினுடைய கால்சட்டைப் பையுக்குள்ளே என்னவோ மொத்தமாகத் தள்ளிக்கொண்டு கிடப்பதைக் கவனித்தார் "கால்சட்டைப் பையுக்குள்ளே என்ன வைத்திருக்கிறாய்?"

சுந்தரம் பரிதாபமாக உபாத்தியாயரைப் பார்த்தான். அந்தப் பார்வை அவரை என்னவோ செய்தது. "ஏன் பயப்படுகிறாய்? நீ நல்ல பையன் பிழையான காரியம் செய்ய மாட்டாய். பயப்படாமல் சொல்லு!" என்றார்.

சுந்தரம் அப்போதும் பதில் சொல்லவில்லை. தலையைக் குனிந்தான். பொல பொலவென்று நாலு சொட்டுக் கண்ணீர் அவன் காலடியில் விழுந்தது. உபாத்தியாயர் அவனை இன்னும் கிட்ட இழுத்து அவன் முதுகைத் தடவிக்கொடுத்து "அழாதே சுந்தரம், அதற்குள்ளே என்ன, புத்தகமா?" என்றார்.

சுந்தரம் இல்லையென்று தலையசைத்தான். பிறகு துடித்துக் கொண்டிருந்த உதடுகளைக் கஷ்டத்துடன் திறந்து மெதுவாக, "வாத்தியார்.... அது... அது... கொஞ்சப் பாண்!" என்றான்.

"ஏன், நீ சாப்பிடவில்லையா?.... பசிக்கவில்லையா?"

"கூப்பன் அரிசி விலை கூடிப்போச்சென்று அம்மா அரிசி வாங்கவில்லை. வீட்டிலே இருக்கிற தங்கச்சிக்கு சாப்பிடக் கொடுக்கத்தான் அதை வைத்திருக்கிறேன்...."

"நீ போ சுந்தரம்" என்று உபாத்தியாயர் வாயால் சொல்லவில்லை அவரால் சொல்ல முடியவில்லை. "அண்ணை பள்ளிக்கூடத்தால் வரும்போது பாண் கொண்டுவருவார் என்று, பசியோடு வழி பார்த்திருக்கும் அந்த மூன்று வயதுக் குழந்தையின் வயிறுமல்லவா இனிமேல் துடிக்கப்போகிறது!" சுந்தரத்தைப் போகும்படி தலையசைத்து விட்டு, உபாத்தியாயர் சால்வைத் தலைப்பினால் தமது கண்களை ஒற்றிக்கொண்டார்.


சுந்தரம்! ..... உன்னைப்போல எத்தனை சுந்தரங்கள்!

*நன்றி – வரதர் கதைகள்.*

# தேடல்

அழகான முகத்தைத் தேடாதே
அது உன் வாழ்வில்
ஏமாற்றத்தை உண்டாக்கும்.
அன்பான இதயத்தைத் தேடு
அது உன் வாழ்வில்
ஏற்றத்தை உண்டாக்கும்
நல்ல நண்பனைத்
தேடி அலையாதே
ஊரில் நல்ல நபராய் இரு
நல்ல நட்பு
உன்னைத் தேடி வரும்.

செல்வன் வி. பர்மிகன்,
தரம் 12 கலைப்பிரிவு, 2018




பா.பாஸ்கரன்.

## வாய்விட்டுச் சிரிக்க...

பரணி : கடையில சாப்பிட்டிட்டுப் பாத்தன் கையில காசில்ல.

சூரி : பிறகு என்ன செய்தாய்?

பரணி : பொக்கற்றில இருந்து எடுத்துக் குடுத்தன்.

ΩΩΩ

ரவி : அவளிடம் உன் பல் அழகைப் பார்த்துக் கொண்டே
இருக்கலாம் எண்டு சொன்னது பிழையாப் போச்சு.

தயன் : ஏன் என்னாச்சு?

ரவி : இந்தாங்கோ பல்செற் எண்டு கழற்றித் தந்திட்டுப் போட்டாள்.

ΩΩΩ

டொக்டர் : ஒப்பிரேசன் முடிஞ்ச பிறகு நீங்கள் நடந்தே வீட்டுக்குப் போகலாம்.

நோயாளி : அப்ப ஆட்டோவுக்குக்கூட காசு இருக்காதோ டொக்டர்.

டொக்டர் : ????

ΩΩΩ

ஆசிரியர் : எக்ஸாமில ஒரு பக்கம்தான் எழுதியிருக்கிற? வெட்கமா இல்ல?

மாணவன் : சேர், பன்னிங்கதான் பக்கம் பக்கமா எழுதும்.
சிங்கம் சிங்கிள் பக்கம்தான் எழுதும் சேர்.

தேடலும் தொகுப்பும் :
செல்வி இ.உதயராஜினி,
தரம் 13, கலை 2017

## அன்பு


நிலா ஒளியைத் தருகிறது
அலை எறியும் கடல் விலையுயர்ந்த
முத்தைத் தருகிறது.
தென்றல் காற்று
உள்ளத்திற்கு இன்பம் தருகிறது.
களங்கமில்லா அன்பு
இனிய வாழ்வைத் தருகிறது.

செல்வி ம. செந்தூரி,
தரம் 12, கலைப்பிரிவு 2018


# நட்புக்கு தன்னலம் இல்லை

பூமியும் வானும் போன்றது
நட்பு
தெய்வத்திற்கு மேலான
தாய்க்கு நிகரானது நட்பு
உறவுகளில் மேலானது நட்பு
மண்ணில் புதைந்து
கனவில் காண்பதல்ல நட்பு
நட்புக்கு தன்னலமும் இல்லை
பொய்யும் இல்லை
வாழ்க்கையின்
அமைதியான நிமிடங்கள்
எதுவென்றால்
நட்புடன் பழகிய நிமிடங்களே!

*செல்வி ச. சுரேந்தினி*
**தரம் 13, கலைப்பிரிவு 2017**



பா.பாஸ்கரன்



பா.பாஸ்கரன்



பா.பாஸ்கரன்



பா.பாஸ்கரன்



பி.பிரகலாதன்

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

வண்ண மலர்களினால் அலங்கரிக்கப்பட்ட கிராமம் செஞ்சோலைக் கிராமம். அக் கிராமத்திற்கு நீர்வீழ்ச்சிகள் மேலும் அழகு சேர்க்கிறது. கமலன் பணக்கார வீட்டில் பிறந்தவன். அவனுடைய தாய், தந்தை அவன் பிறந்தவுடன் மிக்க மகிழ்ச்சியுடன் இருந்தனர். அந்த மகிழ்ச்சி சிறிது காலத்தில் இல்லாமல் போய்விடும் என்று அவர்களுக்குத் தெரியாது.

கமலன் தவமிருந்து பெற்றுக்கொண்ட குழந்தை என்பதனாலும் அவர்களுடைய ஒரே குழந்தை என்பதனாலும் அதிக செல்லத்தைக் காட்டி வளர்த்தனர். அவன் சிறு வயதிலிருந்தே அடங்காதவனாக இருந்தான். சிறிது காலஞ்சென்றுவிட்டால் அவன் தாய், தந்தை சொல்வதைக் கேட்டு நடப்பான் என்று நினைத்தனர்.

கமலன் படிப்பில் சிறந்து விளங்கியதுடன் மிகவும் கெட்டிக்காரனாகவும் இருந்தான். பெரியவனாக வளர்ந்தான். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று நிற்பான். இதனால் அவர்களுடைய பெற்றோர் மனம் உடைந்துபோய்க் காணப்பட்டனர். நாட்கள் செல்லச்செல்ல அவனுடைய ஆசைகள் கூடிக்கொண்டே சென்றது. தனக்கு விருப்பமானவற்றை வாங்கித்தர வேண்டுமென ஒற்றைக்காலில் நிற்பான். இந்நிலையில் அவனுடைய பெற்றோர் பெரும் பிரயத்தனப்பட்டு அவன் கேட்கும் பொருட்களை வாங்கிக்கொடுப்பர்.

கமலன் தன் நண்பர்களுடன் காலையில் செல்வதும் பின்பு மாலையில் வருவதுமாக இருந்தான். அவனுக்குத் திருமண வயது வந்தது. ஶ்ரீலதா என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தனர். திருமணத்திற்குப் பின் தன்னுடைய மனைவியைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத் தனது தந்தைக்கு ஓய்வு கொடுத்துவிட்டு தந்தையினுடைய வியாபாரத்தைச் செய்து வந்தான். அவன் பணத்தை இன்னும் பன்மடங்காக்கினான்.

கமலனிற்கு காலப்போக்கில் அழகான குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு நிசான் என்று பெயர் வைத்தனர். கமலனைப்போலவே அவன் படிப்பில் சிறந்து விளங்கியதுடன் பெற்றோரின் சொற்களைக் கேட்காதவனாகவும் காணப்பட்டான். அவனுடைய படிப்புத் திறமையினால் பெற்றோர் சந்தோசப்பட்டாலும் அவனுடைய பிடிவாதக் குணத்தினால் மிகவும் வருந்தினர்.

கமலனைவிட அவனுடைய மகன் நிசான் யாருக்கும் அடங்காமல் இருந்தான். கமலனுடைய சொல்லைக் கேட்காமல் எதிர்த்துக் கதைப்பான். நான் நினைத்ததைத்தான் செய்வேன் என்று சொல்வான்.

சுற்றத்தாருடனும் சண்டைபோட்டுக் கொள்வான். பெரியவர்கள் என்றும் பார்க்காமல் அவமானப்படுத்துவான். இதனால் அருகில் நிற்பவர்கள் நிசானைப் பற்றிக் குறை கூறியவண்ணமே இருந்தனர். நிசானை நினைத்து வருந்தி அயலவர்களிடம் பேச்சினை வாங்கிக்கொண்டிருந்தனர்.

கமலனுக்கு அப்போதுதான், தான் செய்த தவறு ஞாபகத்திற்கு வந்தது. என்னுடைய பெற்றோரை மதித்து அவர்களின் பேச்சைக் கேட்காமல் நடந்து கொண்டதனால் தான் இப்போது எனது மகனும் எனக்கு அடங்காமல் என்னை எதிர்த்து நிற்கிறான் என்று நினைத்துக்கொண்டு கமலன் தனது பெற்றோரிடம் சென்று தான் செய்த தவறுக்காக வருந்தி பணிவுடன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

**செல்வி இ.சந்துஜா,**

**தரம் 12, கலைப்பிரிவு 2018**

# தமிழ் அறிவோம்

1. யாழ்ப்பாண வைபவ கௌமுதி' எழுதியவர் யார்?

    கல்லடி வேலுப்பிள்ளை

2. யாழ்ப்பாண வைபவ மாலை எழுதியவர் யார்?

    மாதகல் மயில்வாகனப் புலவர்.

3. தமிழ் புளூராக் என்ற நூலை எழுதியவர் யார்?

    சைமன் காசிச்செட்டி

4. பாவலர் சரித்திர தீபகம் என்ற நூலை எழுதியவர் யார்?
    ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை

5. தமிழ்ப்புலவர் சரித்திரம் என்ற நூலை எழுதியவர் யார்?
    சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர்

6. 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' என்ற நூலை எழுதியவர் யார்? வித்துவசிரோமணி சி. கணேசையர்

7. தமிழ் தந்த தாதாக்கள் என்ற நூலை எழுதியவர் யார்?

    க.சி குலரத்தினம்

8. 'ஈழத்துணவும் காளகத் தாக்கமும்' என்ற தொடர் வரும் சங்க இலக்கிய நூல் எது?

    பட்டினப்பாலை

9. ஈழத்தைச் சேர்ந்த தமிழ்ப்புலவர்கள் இருவர் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் யாவர்?

    ஈழத்துப் பூதன்தேவனார், முரஞ்சியூர் முடிநாகராயர்

10. ஈழத்தில் தோன்றிய இரகுவம்சம் நூலின் ஆசிரியர் பெயர் யாது? அரசகேசரி

11. வடமொழியில் தோன்றிய இரகுவம்சத்தை இயற்றியவர் யார்?
    காளிதாசர்.

12. யாழ்ப்பாண மன்னர் காலத்தில் இருந்த நூல் நிலையத்தின் பெயர் யாது? சரஸ்வதி பண்டாரம்

13. வையாபாடல் என்னும் நூலை இயற்றியவர் யார்?

வையாபுரி ஐயர்

14. கைலாயமாலை என்னும் வரலாற்றுச் சார்பான நூலை இயற்றியவர் யார்? முத்துராசன்.

15. சிலப்பதிகாரக் காவியத்தைத் தழுவி ஈழத்தில் எழுதப்பட்ட ' கண்ணகி வழக்குரை' நூலின் ஆசிரியர் யார்? சகவீரன்.

16. போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த 'சந்தியோகுமையார் அம்மானை' அல்லது 'அர்ச்ச யாகப்பர் அம்மானை' என்ற நூலை இயற்றியவர் யார்? பேதுருப்புலவர்

17. பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் முதலான நூல்களை

இயற்றியவர் யார்? சுன்னாகம் வரதபண்டிதர்.

18. பறாளை விநாயகர் பள்ளு என்னும் நூலை இயற்றியவர் யார்? நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்.

19. 'திருச்செல்வர் காவியம்' இயற்றியவர் யார்?

பூலோகசிங்க முதலியார். (அருளப்ப நாவலர்)

20. கிறிஸ்தவ இலக்கியமான 'யோசேப்புப் புராணம்' என்ற நூலை இயற்றியவர் யார்? கூழங்கைத் தம்பிரான்.

21 'கரவை வேலன் கோவை' யை இயற்றியவர் யார்?

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

22.'தண்டிகைக் கனகராயன் பள்ளு' நூலை இயற்றியவர் யார்? மாவைச் சின்னக்குட்டிப் புலவர்.

23. அமுதாகரம் என்ற வைத்திய நூலை எழுதியவர் யார்? வரதபண்டிதர்.

24. சந்தானதீபிகை என்ற சோதிட நூலை எழுதியவர் யார்? இராமலிங்க முனிவர்.

25. 'வாளபிமன் நாடகம்' என்னும் கூத்துநூலை எழுதியவர் யார்? வட்டுக்கோட்டை கணபதி ஐயர்.

26. ஈழத்தில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை எது?
உதயதாரகை (1841)

27. ஈழத்துப் பதிப்புச் செம்மல் என அழைக்கப்படுபவர் யார்?
சி.வை. தாமோதரம்பிள்ளை.

28. தத்தைவிடு தூது என்ற நூலின் ஆசிரியர் யார்?
தி.த சரவணமுத்துப்பிள்ளை

29. கனகிபுராணத்தின் ஆசிரியர் யார்? சுப்பையனார்.

30. பனையின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் தாலபுராணத்தைப் பாடியவர் யார்? காசிநாதப் புலவர்

31. கோட்டுப் புராணத்தைப் பாடியவர் யார்? வே. இராமலிங்கம்

32. தமிழில் வெளிவந்த முதலாவது நாவல் எது?
பிரதாபமுதலியார் சரித்திரம் - 1876

33. இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ் நாவல் எது?
அசன்பே சரித்திரம் (1885) - அறிஞர் சித்திலெவ்வை

34. ஊசோன் பாலந்தை கதை (1891) நாவலை எழுதியவர் யார்?
திருகோணமலை எஸ். இன்னாசித்தம்பி

35. மோகனாங்கி (1895) நாவலை எழுதியவர் யார்?
திருகோணமலை த. சரவணமுத்துப்பிள்ளை

36. கங்கையும் கடாரமும் கொண்டவர்கள் யார்? சோழர்

37. சோதிடம், தத்துவம், வைத்தியம் முதலியவற்றைக் குறிக்கும் வடமொழிப் பெயர் யாது? சாஸ்திரம், அல்லது சாத்திரம்

38. நாஞ்சில் நாட்டு சமூக சீர்திருத்தத்தை முன்னிட்டு 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மாண்மியம்' என்னும் அங்கத நூலை எழுதியவர் யார்? கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

39. திருமுருகாற்றுப்படையை இயற்றிவர் யார்?
நக்கீரர் அல்லது நக்கீரனார்

40. பொருநராற்றுப்படையை இயற்றியவர் யார்?
முடத்தாமக்கண்ணியார்

41. சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர் யார்? நத்தத்தனார்

42. பெரும்பாணாற்றுப்படையை இயற்றியவர் யார்?
கடியலூர் உருத்திரங்கண்ணனார்

43. முல்லைப்பாட்டை இயற்றியவர் யார்? நப்பூதனார்

44. மதுரைக்காஞ்சியை இயற்றியவர் யார்? மாங்குடி மருதனார்

45. நெடுநல்வாடையை இயற்றியவர் யார்? நக்கீரர்

46. குறிஞ்சிப்பாட்டை இயற்றியவர் யார்? கபிலர்

47. பட்டினப்பாலையை இயற்றியவர் யார்?
கடியலூர் உருத்திரங்கண்ணனார்

48. மலைபடுகடாமை இயற்றியவர் யார்? பெருங்கௌசிகனார்

49. நான்மணிக்கடிகை இயற்றியவர் யார்? விளம்பி நாகனார்

50. இனியவை நாற்பது இயற்றியவர் யார்? பூதஞ்சேந்தனார்

51. இன்னா நாற்பது இயற்றியவர் யார்? கபிலர்

52. கார் நாற்பது இயற்றியவர் யார்?
மதுரைக்கண்ணங்கூத்தனார்

53. களவழி நாற்பது இயற்றியவர் யார்?
பொய்கையார்

54. திணைமொழி ஐம்பது இயற்றியவர் யார்?
கண்ணன் சேந்தனார்

55. திணைமாலை நூற்றைம்பது இயற்றியவர் யார்?
கணிதமேதாவியார்

56. ஐந்திணை ஐம்பது இயற்றியவர் யார்?
மாறன் பொறையனார்

57. ஐந்திணை எழுபது இயற்றியவர் யார்?
மூவாதியார்

58. திரிகடுகம் எழுதியவர் யார்? நல்லாதனார்
59. ஆசாரக்கோவையை எழுதியவர் யார்?
பெருவாயில் முள்ளியார்
60. பழமொழி நானூறு எழுதியவர் யார்? மூன்றுறை அரையனார்
61. சிறுபஞ்சமூலம் எழுதியவர் யார்? காரியாசான்
62. முதுமொழிக்காஞ்சி எழுதியவர் யார்? மதுரைக்கூடலூர் கிழார்
63. ஏலாதி எழுதியவர் யார்? கணிமேதாவியார்
64. இன்னிலை (கைந்நிலை) எழுதியவர் யார்? பொய்கையார்
65. முதல் ஏழு திருமுறைகளும் எவ்வாறு அழைக்கப்படும்?
தேவாரங்கள் (8227 பாடல்கள்)
66. மூவருலா இயற்றியவர் யார்? ஒட்டக்கூத்தர்
67. கலிங்கத்துப்பரணி இயற்றியவர் யார்? செயங்கொண்டார்
68. தக்கயாகப்பரணி இயற்றியவர் யார்? ஒட்டக்கூத்தர்
69. ஏர்எழுபது இயற்றியவர் யார்? கம்பர்
70. சரசுவதி அந்தாதி இயற்றியவர் யார்? கம்பர்
71. சடகோபர் அந்தாதி இயற்றியவர் யார்? கம்பர்
72. விநாயகரகவல் இயற்றியவர் யார்? ஔவையார்
73. கந்தபுராணம் இயற்றியவர் யார்? கச்சியப்ப சிவாச்சாரியார்
74. பாகவதம் இயற்றியவர் யார்? செவ்வைச்சூடுவார்
75. இரகுவம்சம் இயற்றியவர் யார்? அரசகேசரி
76. அரிச்சந்திரபுராணம் இயற்றியவர் யார்? வீரகவிராயர்
77. நளன்கதை எழுதியவர் யார்?
புகழேந்தி (பாரத உபகதை, வடமொழித்தழுவல்)
78. வாளபிமன் நாடகம் எழுதியவர் யார்?
வட்டுக்கோட்டை கணபதி ஐயர்

79. சிலம்பில் சமணசமயக் கொள்கைகளை எடுத்துக்கூற இளங்கோவடிகள் பயன்படுத்தும் பாத்திரத்தின் பெயர் யாது?
கவுந்தியடிகள்

80. மாதானுபங்கி என்ற பெயர் கொண்டவர் யார்? திருவள்ளுவர்

81. மருதப்பக்குறவஞ்சிவைய எழுதியவர் யார்?
மெல்லோப்பாதிரியார்

82. தமிழ் வியாகரணம் என்ற வசனஇலக்கண நூலின் ஆசிரியர்யார்? நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை

83. ஆறுமுகநாவலர் 1849 இல் நல்லூரில் நிறுவிய அச்சியந்திர சாலையின் பெயர் யார்?
வித்தியாநுபாலன யந்திரசாலை

84. சரசோதிமாலையை எழுதியவர் யார்?
தேனுவரைப்பெருமாள் அல்லது போசராச பண்டிதர்

85. கோணேசர் கல்வெட்டு வேறு எப்பெயரால் அழைக்கப்பட்டு வந்தது? கோணேசர் சாசனம்

86. ஞானப்பள்ளு வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
வேதப்பள்ளு

87. தேசவழமைச் சட்டத்தினை நடைமுறைப் படுத்தியவர்கள் யாவர்? ஓல்லாந்தர்

88. மாறன், சடகோபன் என அழைக்கப்படும் ஆழ்வார் யார்?
நம்மாழ்வார்

89. கங்கைகொண்ட சோழன் என அழைக்கப்பட்ட சோழ மன்னன் யார்? இராசேந்திரசோழன்

90. சீவகசிந்தாமணியை இயற்றியவர் யார்? திருத்தக்க தேவர்

91. காளமேகப் புலவரின் இயற்பெயர் யாது?
வரதன்

92. தொல்காப்பியம் கூறும் முல்லைநிலத் தெய்வத்தின் பெயர் யாது? மாயோன் (திருமால்)

93. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தேசிய உணர்வைத் தூண்டும் நூல்களாக அமைந்தவை எவை?
தட்சண கைலாய புராணம், கதிரை மலைப்பள்ளு

94. மொழிஞாயிறு என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் யார்? தேவநேயப்பாவாணர்.

95. தமிழ்மொழியின் தந்தையும் முதற்தமிழிலக்கண ஆசிரியரும் எனக் கூறப்படுபவர் யார்? அகத்தியர்

96. நன்னூலார் மொழி இறுதியில் வராது எனக் கூறிய உயிரெழுத்து எது? ஏ

97. ஈழத்தில் 19 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான நூல்களை மொழிபெயர்ப்பதில் உழைத்த பெரியாரின் பெயர் யாது?
டாக்டர் கிறீன்

98. சங்கமருவிய காலத்தில் எழுந்த போர் பற்றிய நூலின் பெயர் யாது?
களவழி நாற்பது

99. இலங்கையில் உள்ள வெந்நீரூற்றுக்கள் பற்றிப் பாடியவர் யார்?
புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை

100. இத்தாலியக் கம்பன் எனப் பெயர் பெற்றவர் யார்?
வீரமாமுனிவர்

தொகுப்பு :
**மாணவர்கள்**
**தரம் 12, கலை 2017**



## சிறுவர்களது உரிமைகளைப் பாதுகாத்து சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்

இன்றைய நவீன தொழினுட்ப வளர்ச்சியில் சமூகத்தின் முதுகெலும்புகளாக சிறுவர்கள் மிளிர்கின்றனர். இயற்கையாக பிறந்த குழந்தை இவ் உலகில் வாழ்வதற்கும் நிலைத்து நிற்பதற்கும் உரிமைள் இன்றியமையாததாகும். மனிதன் பிறந்தால் போதாது நன்றாக வாழ வேண்டும். நலன்கள் பாதிக்கப்பட்டால் மனிதன் நன்றாக வாழ இயலாது. தனது உரிமைகளைப் பேணிப் பொது நலனையும் பாதுகாப்பதற்கு ஒருவருக்கு உள்ள சக்தியே உரிமைகளாகும். சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் உலகெங்கும் அனுஸ்டிக்கப்படும் தினமே சிறுவர் தினமாகும். சிறுவர்களது உரிமைகளைப் பாதுகாப்பது சமூகத்தின் கடமையாகும். குழந்தை வளர்ந்து வரும் பருவத்தில் சமூகத்தில் பல இன்னல்களை சந்திக்கின்றது. இதன் மூலம் சிறுவர்களது உரிமைகள் முழுமையாக மறுக்கப்படுவதையும் சமூகத்தில் அவதானிக்க முடிகிறது.

இன்று சிறுவர்களது உரிமைகள் குறித்து உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு வருகிறது. சிறுவர் துஸ்பிரயோகமும் பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல கோணங்களில் தினமும் அரங்கேறிய வண்ணம் காணப்படுகிறது. இத்தகைய துஸ்பிரயோகம் காலத்துக்குக் காலம் அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைவடையவில்லை நமது நாட்டிலும் சிறுவர் துஸ்பிரயோகம் குடும்ப வன்முறைகள், சிறுவர்களை அடிமைப்படுத்தி வைத்திருத்தல் பொருளாதார நலனுக்காகப் பயன்படுத்துதல், பயமுறுத்தல் என்பதை சிறுவர்களது துஸ்பிரயோகமாக கருதமுடிகிறது. இத்தகைய துஸ்பிரயோகங்கள் எமது நாட்டில் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களாக பல காணப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல், வறுமை, சட்டரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமை என்பன சிறுவர்களது சுதந்திரமான செயற்பாடுகளுக்குத் தடையாக அமைகின்றன. இவற்றைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள பல தீய சக்திகள் முனைகின்றனர். இளைஞர்கள் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என உறவு உறவு ரீதியான நெருங்கியவர்களே அவர்களது வாழ்வின் தீய சக்திகளாகத் திகழ்கின்றனர். இன்று உலக நாடுகள் முழுவதும் சிறுவர் பாதுகாப்புக் குறித்தே பேசப்பட்டு வருகின்றது.

இன்றைய சிறுவர்களே எதிர்காலத் தலைவர்கள், நாளை மலரப் போகும் மொட்டுக்கள், எதிர்காலச் சிற்பிகள், நாட்டை வளப்படுத்தப் போகும் சந்ததிகள் என பேச்சளவில் கூறுகின்றோம். எழுத்தளவில் எழுதுகின்றோம். ஒவ்வொரு நாடுகளும் தத்தமது நாட்டின் சிறார்களின் நல்வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பான வகையில் நடந்து கொள்ள வேண்டும். இதனை வலியுறுத்தினால்தான் கொடூரமான செயற்பாடுகள் சமூகத்தில் நடைபெறாது. குற்றங்கள் செய்வதற்காக தீய சக்திகள் முன்வரமாட்டார்கள்.

சிறுவர்களை சிறுவர்களாகப் பார்க்க வேண்டும். சிறுவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படும். பெண்களுக்கான சுதந்திரம் கிடைக்க வேண்டும். பதினெட்டு வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்களாக மதிக்கப்பட வேண்டும். சிறுவர்களது உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான சமவாயத்தை முன் வைக்க வேண்டும். சிறுவர்களது அக்கறை செலுத்துதல் வேண்டும்.சிறுவர்கள் சிறுவயதிலிருந்தே நல்லவர்களாக மாசுமறுவற்றவனாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போது தான் இளைஞராகிய பருவத்திலும் கூட அவனது சிந்தனை நல்ல விதமானதாக அமையும். சிறுவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக வாழ வேண்டும். சிறுவர்கள் எதிர்காலத்தில் சிறந்த நற் பிரஜையாக மிளிர வேண்டும். நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பவராகத் திகழ வேண்டும். நாளைய அறிஞர்களாகவே விஞ்ஞானியாகவே கல்வியில் சிறந்த அரசனாக விளங்கிக் கொள்ள வேண்டும். உலகம் போற்றும் தலைவர்களாக வாழவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற வித்தியாவின் கொலைச் சம்பவத்தை எடுத்துப்பார்த்தோமானால் வித்தியா என்ற மாணவியை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் வரலாற்றிலே இடம் பெறாத சம்பவமாக வளர்ந்து வந்துள்ளது. காமுகர்களின் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவியின் கொடூரக் கொலைச் சம்பவம் இன்று பெண் சமூதாயத்தையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. பெண்களுக்கான பாதுகாப்பே குறைந்து கொண்டு போகின்றது.

வித்தியாவின் கொலைச் சம்பவம் மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி நாடுமுழுவதும் மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இன்னும் சிறுவர் பாலியல் வன்புணர்வுகளால் தமது பிள்ளைகளைப் பறிகொடுத்து மனநோய்க்கு ஆளாகி வேதனையோடு வாழும் பெற்றோர்கள் பலர் உள்ளனர். சிறுவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல இத்தகைய செயல்களைப் புரியும் தீய சக்திகளுக்கு சட்டரீதியான தண்டனை வழங்கப்பட வேண்டும். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதை ஒவ்வொருவரும் கருத்திற் கொண்டு சமூகத்துடன் ஒன்றிணைந்து சிறுவர்களது உரிமைகளுக்குக் குரல் கொடுப்போமாக.

செல்வி பா.பிரியங்கா
தரம் 12, கலை 2018

## சிந்திக்க சில சிந்தனைத் துளிகள்

- ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

- கடின உழைப்பு, சோர்வில்லா மனம், நல்ல விதி இவை மூன்றுமே எந்தவொரு மனிதனதும் வெற்றிக்கு வேண்டியவை.

- இலட்சியம் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகைப்போன்றது. ஏனெனில் கரையை அடைய முடியாது.

- சோம்பலும் சோர்வும் கொண்டு நூறு ஆண்டு வாழ்வதைவிட பேருழைப்போடு ஒரு நாள் வாழ்வது மேலானது.

- பிறர் உங்களைத் தட்டிக்கொடுக்க மாட்டார்களா என்று ஏங்குவதைவிட உங்களை நீங்களே தட்டிக்கொள்ளுங்கள் உள்ளத்தில் உற்சாகம் ஊற்றெடுக்கும்.

தொகுப்பு : **பா.பாஸ்கரன்**

# ஒற்றுமை

**பொறாமையை விடு**
**ஒற்றுமையை வளர்**
**அது உன் வாழ்வை வளப்படுத்தும்.**
**ஒற்றுமையால் இணைவது உறவுகள் மட்டுமல்ல**
**நம் வாழ்க்கையும்தான்.**
**ஒற்றுமையே வாழ்வில் வேண்டும்**
துன்பத்திலும் உன்னுடன் கூட வரும்.
காகங்குருவி கூட ஒற்றுமையாக இருக்கையில்
ஆறறிவு படைத்த நீ மட்டும்
ஏன் வேற்றுமையை வளர்க்கிறாய்?

**பா. பாஸ்கரன்**

# வாசிப்புப் பழக்கம்



ஒரு மாணவனின் கற்றல் செயன்முறைக்கு தொடர்பாக அமைவது வாசிப்பாகும். வாசிப்புத் தொடர்பாக உடன்பாடான மனப்பாங்கை மாணவர்களிடையே ஏற்படுத்துவது என்பது மொழி ஆசிரியர்கள் மட்டுமன்றி எல்லா ஆசிரியர்களும் எதிர் கொள்ளும் மிகவும் கடினமான பணியாகும். இன்றைய மொழியாசிரியர்கள் கூட பிள்ளைகளிடம் வாசிப்பை ஊக்குவிப்பதற்குப் பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர். அதற்குக் காரணம், எமது சமூகத்தினரிடையே உட்புகுந்திருக்கும் அதிநவீன தொழில் நுட்பமாயை ஆகும். அதன் காரணமாகவே இன்றைய இளம் பராயத்தினரின் கைகளில் நவீன தொடுதிரை பேசிகளும், தொலைக்காட்சிகளும், இணைய சாதனங்களும் காணப்படுகின்றன. இவற்றுக்கு அடிமையாகிய நிலையில் எம் பிள்ளைகள் காணப்படுகின்றனர்.இந்த நிலை காரணமாகவே இன்றைய பிள்ளைகள் வாசிப்புத் திறனை விருத்தி செய்ய முனைகின்றனர்.

இந்தத் தாக்கத்தின் காரணமாகவே எமது மாகாண மாணவர்களின் அடைவு மட்டம் குறைவான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அண்மைய பரீட்சை முடிவுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. அத்தோடு மட்டுமின்றி இன்றைய மாணவர்களின் வாசிப்பு என்பது பாடநூல்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

எமது நாட்டின் கல்வி முறைமை முழுக்க முழுக்க பரீட்சையை நோக்காகக் கொண்டது. அத்தோடு இன்றைய பெற்றோர்களின் மன நிலையில் ஏற்பட்ட மாற்றம். பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியில் முழு நம்பிக்கை கொள்ளாத பிரத்தியோக வகுப்புக்களுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றன. இரவில் வீடுகளில் தனிப்பட்ட வகுப்புக்களும் இடம் பெற்று மாணவர்களை சுயமாக இயங்கவிடாது தடுக்கின்றன.

செயற்கை முறையான கற்றல் முறை காரணமாக வாசிப்புப் பழக்கமானது அருகிப் போவதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையில் சமூக மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பது எனது கருத்து.

இந்த சமூக மாற்றத்துக்கும் மொழி விருத்திக்கும் பாடசாலை மட்டத்தில் மட்டுமின்றி குடும்பச் சூழலிலும் முன்பள்ளி நிலையங்களிலும் பல்வேறு வாசிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை துரிதமாக அறிமுகப்படுத்தி செயற்படுத்துவதன் ஊடாகவே மாணவர்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியமான அடிப்படை மொழித்திறன்களை பெற்றுக்கொள்ளச் செய்யலாம். இதற்கு இளம் பருவத்தினராகிய மாணவர்கள் விரும்பக் கூடிய வகையில் அவர்தம் அறிவுக்கேற்ப நூல்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும், ஏனைய சமய விழுமிய நூல்களையும் பல வர்ணங்களில் வழங்குவதனூடாக இந்த வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

பிள்ளைகளின் பெற்றோர்களும், முன்பள்ளி ஆசிரியர்களும், பங்குதாரர்களாக மாறவேண்டும். தமது வீடுகளில் சிறிய மாதிரி நூலகம் அமைத்து அதில் நூல்களைச் சேகரித்தும் பிள்ளைக்கு வழங்க முடியும்.

சிறுபராயம் தொடக்கம் கடைகளில் தின்பண்டங்களையும், விளையாட்டுப் பொருள்களையும் வாங்குவதைக் கட்டுப்படுத்தி அதற்குப் பதிலாக பல நூல்களைக் கொள்வனவு செய்து, வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பிள்ளைக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பிள்ளைகளைப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு பழக்கத்துடன் பிள்ளைகள் பாடசாலைகளில் இடைநிலை உயர் வகுப்புக்களில் தம் ஒப்படைகளைத் தாமே தரவுகளைச் சேகரித்துச் செய்வதற்கும், தமது அறிவை விருத்தி செய்வதற்கும் இயலுமான நிலையில் பழக்கப்பட்டிருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை.

*செல்வி ம. கௌசிகா,*
*தரம் 13, கலை 2017*

## உயர்தர மாணவர் மன்றம் - செயற்குழு - 2016

| | |
|---|---|
| காப்பாளர் | : திரு இரா. ஸ்ரீநடராசா |
| பொறுப்பாசிரியர் | : திரு சு. குணேஸ்வரன் |
| தலைவர் | : செல்வன் யோ. தயன் |
| செயலாளர் | : செல்வி இ. உதயராஜினி |
| பொருளாளர் | : செல்வி சி. விதுஜா |
| உபதலைவர் | : செல்வன் நா. மகீபன் |
| உபசெயலாளர் | : செல்வி சி. சஜிதா |
| இணைஇதழாசிரியர் | : செல்வி ச. சுரேந்தினி, செல்வி இ. சந்துஜா |

**நிர்வாக உறுப்பினர்**

செல்வி ம. கௌசிகா
செல்வி கோ. ஸ்ரீஜினி
செல்வி ப. கிருஷிகா
செல்வி த. உஷாளினி
செல்வி சி. கயந்தினி
செல்வன் க. வினோத்
செல்வன் அ. விதுஷன்
செல்வன் பி. பிலைக்ஷன்

**வழிகாட்டல், ஆலோசனை**

திரு த. இராஜசேகரன்
திரு கு. குகானந்தன்
திரு இ. உதயசங்கர்
திரு து. ராமதாஸ்
திரு செ. கணேசலிங்கம்
திரு வீ. வீரகுமார்
திரு தெ. சுகுமார்
திரு செல்வரட்ணம்
திரு ரூபரஞ்சன்
திருமதி தே. யோகேந்திரன்
செல்வி சு. குணசிங்கம்
திருமதி சு. கண்ணதாசன்
திருமதி சா. விஜயசங்கர்

❖❖❖


யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்
உயர்தர மாணவர் மன்றம் - 2016
கறந்த பால் கன்னலொடு
நெய் கலந்தாற் போல
நட்பும் நல் ஒழுக்கமும்
நற் கலைகளும் கற்று
பல்லாண்டு வாழ்ந்திடுவீர்...
வாழ்க... வாழ்க... வாழ்கவே...
உயர்தர மாணவர் மன்றம்.